# DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No.558/2023
Deposition of Witness for L.W.5 / P.W.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | காஜா மைதீன் | | | |
| Father's Name | : | அப்துல் ரகுமான் | Occupation | : | சுய தொழில் |
| Village | : | பச்சப்பாளையம் | | | |
| District | : | ஈரோடு | Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.02.2026**
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.
**எதிரி ஆஜரில் உள்ளார்.**
**முதல் விசாரணை:**

நான் பச்சப்பாலியில் குடியிருந்து கொண்டு, சுயதொழில் செய்து வருகிறேன். நான் கடந்த நான்கு, ஐந்து வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது பக்கத்து வீட்டில் கணவன், மனைவிக்கு இடையே தகராறு ஏற்பட்டது சம்பந்தமாக போலீசார் வந்து விசாரணை செய்து, படம் வரைந்தார்கள். அப்பொழுது நான் அதில் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகின்ற தினத்திற்கு மறுநாள் போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள் என்றால், சரிதான். போலீசார் வந்து விசாரணை செய்து, சம்பவ இடத்தை வரைபடம் வரைந்ததாக சொல்லப்படும் நேரம் காலை சுமார் 11.00 மணி இருக்குமா என்றால், இருக்கும். நான் சொல்வது போல் போலீசார் சம்பவ இடத்தில் வைத்து வரைபடம் எதுவும் வரையவில்லை, போலீசார்

கேட்டுக் கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.